செ.வெ.எண்: 286 நாள்: 30.04.2020

**கொரோனா வைரஸால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மகளிர் சுய உதவி குழுவினருக்கு வங்கிகள் மூலம் சிறப்பு கடனுதவி திட்ட செயலாக்கம் குறித்த ஆலோசனைக் கூட்டம் மண்டல கொரோனா தடுப்புக்குழு அலுவலர் திரு.எம்.எஸ்.சண்முகம் இஆப., அவர்கள் தலைமையில் அவர்கள் தலைமையில் நடைபெற்றது**

தஞ்சாவூர் மாவட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் கொரோனா வைரஸால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மகளிர் சுய உதவி குழுவினருக்கு வங்கிகள் மூலம் சிறப்பு கடனுதவி திட்ட செயலாக்கம் குறித்த ஆலோசனைக் கூட்டம் மண்டல கொரோனா தடுப்புக்குழு அலுவலர் திரு.எம்.எஸ்.சண்முகம் இஆப., அவர்கள் தலைமையில், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ம.கோவிந்த ராவ் இஆப., அவர்கள் முன்னிலையில் இன்று(30.04.2020) நடைபெற்றது.

கூட்டத்தில் மண்டல கொரோனா தடுப்புக்குழு அலுவலர் அவர்கள் தெரிவித்ததாவது :-

தஞ்சாவூர் மாவட்டத்தில் 14 ஊராட்சி ஒன்றியங்களுக்குட்பட்ட 589 ஊராட்சிகளிலுள்ள 12317 மகளிர் சுய உதவி குழுக்களில் 163355 உறுப்பினர்கள் உள்ளனர். கொரோனா பாதிப்பு காரணமாக மகளிர் சுய உதவி குழுக்களுக்கு வங்கிகளின் மூலம் சிறப்பு கடனுதவிகள் வழங்கப்பட உள்ளது. சிறப்பு கடனுதவி திட்டத்தின் கீழ் ஒரு உறுப்பினருக்கு குறைந்தபட்சம் 5000 ரூபாயும், அதிகபட்சமாக 1,00,000 ரூபாயும் வழங்கப்படும். இதற்கு வங்கிகளில் ஏற்கனவே 2 முறை கடன் பெற்று, வங்கியில் நிலுவை இல்லாமல் தொடர்ந்து கடன் செலுத்தும் சுய உதவி குழுக்களாக இருக்க வேண்டும். இதற்கான வட்டி விகிதம் 7.50 % முதல் 10 % வரை ஆகும்.

கொரோனா சிறப்பு கடனுதவி திட்டத்தில் பயன் பெறுபவர்கள் 24 முதல் 36 மாதங்களுக்குள் கடனை திரும்ப செலுத்த வேண்டும். முதல் 6 மாதங்கள் கடனை திரும்ப செலுத்த தேவையில்லை. 6 மாதங்கள் கழித்து வட்டியுடன் கடனை செலுத்த வேண்டும். மேலும், மகளிர் சுய உதவி குழுவினர் ஏற்கனவே பெற்ற கடன் தொகை மற்றும் தற்போது பெறப்படும் கடன் தொகை இவற்றை சேர்த்து ரூபாய் 10 லட்சத்திற்கும் மிகாமல் இருக்க வேண்டும்.

ஊரக வாழ்வாதார குழு விவரங்களை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மூலமாக ஒரு வார காலத்திற்குள் பெற்று கடனுதவியை வழங்கிட அனைத்து வங்கிகளும் அறிவுறுத்தப்படுகிறது. தினம் எத்தனை சுயஉதவி குழுக்களுக்கு கடனுதவி வழங்கப்பட்டது என்ற விவரத்தை அறிக்கையாக தினமும் சமர்ப்பிக்க வேண்டும்.

இவ்வாறு மண்டல கொரோனா தடுப்புக்குழு அலுவலர் அவர்கள் தெரிவித்தார்.

தொடர்ந்து, இந்தியன் வங்கி மூலம் 4 சுய உதவி குழுக்களுக்கு தலா 60,000 த்திற்கான காசோலைகளை மண்டல கொரோனா தடுப்புக்குழு கண்காணிப்பு அலுவலர் அவர்கள் வழங்கினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் திரு.பழனி, திட்ட இயக்குனர்(மகளிர் திட்டம்) திரு.ராஜ்குமார், முன்னோடி வங்கி மேலாளர் திரு.சீனிவாசன், வங்கியாளர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், மகளிர் சுய உதவி குழு ஒருங்கிணைப்பாளர்கள், மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

செய்தி வெளியீடு : செய்தி - மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.